# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. CC - 136/2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : படிவுதேவர் | Caste | : |
| Father/Husband Name | : நல்லுதேவர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(A2 Died. A1, A3 prsent)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 02.01.2024.**

**முதல் விசாரணை**

1. நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். உடன்காடுபட்டியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 1வது எதிரி பாண்டி எனது அண்ணன் மகன் ஆவார். 2 மற்றும் 3வது எதிரி ராஜா, சிவராஜா எனது அக்கா மகன்கள் ஆவார். 2வது எதிரி இறந்துவிட்டார். எதிரிகளுக்கு எங்களுக்கு சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்தது. இது சம்பந்தமாக வழக்கு நடந்து வருகிறது. 4 வருடத்திற்கு முன்பு பிரச்சனைக்குரிய சொத்தில் வைத்து 1 முதல் 3 எதிரிகள் வயரிங் வேலை செய்ய முயற்சித்தார்கள், அதை நாங்கள் தடுத்தபோது, 2வது எதிரி ராஜா என்னை கையால் அடித்து கீழே தள்ளிவிட்டார். பாண்டி, சிவராஜா ஆகியோர் என்னை அடித்தார்கள். எனக்கு தலை மற்றும் உடம்பில் காயம் ஏற்பட்டது. 1வது எதிரி பாண்டி திருப்புளியால் எனது தலையில் குத்தி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார். 3வது எதிரி சிவராஜா எனது மகள் செல்வியை கையால் அடித்தார். மருத்துவமனைக்கு செல்வதற்கு முன் விக்கிரமங்கலம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்து, மருத்துவ நமுனா பெற்று, நான் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்றுகொண்டு மதுரை அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக சென்றேன். 6 நாட்கள் சிகிச்சயையில் இருந்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை.**